# மட்/கமு/புதுக்குடியிருப்பு வாணி வித்தியாலயம்
# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2019

| தரம் - 11 | தமிழ்இலக்கிய நயம் | நேரம்: 3 மணித்தியாலயம் |
|---|---|---|
| பெயர்/சுட்டெண் : | | புள்ளிகள் : |

**பகுதி 1**

**I – V வரையுள்ள வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.**

1) i. " மன்னுமாலை வெண்குடையான்
வளையா செங்கோலது ஓச்சி"

அ) இங்கு குறிப்பிடப்படும் மன்னன் யார்?

ஆ) அவனது சிறப்புக்களைக் குறிப்பிடுக.

ii. " ஏர்குலாம் முகத்தினானள இறைமுகம் எடுத்து நோக்கி தார்குலாம் அலங்கல் மார்பன் தாயாரை நினைந்து நைந்தான்"

அ) இங்கு அலங்கல் மார்பன் யார்?

ஆ) ஏர்குலாம் முகத்தினாள் யார்?

iii. "கர்ணனுக்கு கிடைத்த நாகாஸ்திரத்தை ஒத்த எலிப்பொறியைத் தடவிப் பார்த்தான்"

அ) இவ்வடியில் காணப்படும் அணியாது? விளக்குக.

ஆ) இவ்வடியில் இடம் பெறும் காவியம் யாது?

iv. " பசுவின் பால் தான் அவனுடைய தேகத்தில் ஓடும் இரத்தம்"

அ) இங்கு அவன் எனக் குறிப்பிடப்படுபவன் யார்?

ஆ) இதில் இடம் பெறும் மனித நேயப்பண்பு யாது?

v. " அன்ன காலையின் ஆண்தகை ஆளியும்
பொன்னின் நல்நகர் வீதியில் புக்கணன்"

அ) ஆண்தகை ஆளி என்று குறிப்பிடப்படுபவன் யார்?

ஆ) பொன்னின் நல்நகர் என்று குறிப்பிடப்படும் நகர் எது?

Education கல்வி අධ්‍යාපන

<u>கீழ்க்காணும் பாடப்பகுதியை வாசித்து தரப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.</u>

வேப்பம் பூ மிதக்கும்
எங்கள் வீட்டுக் கிணற்றில்
தூர் வரும் உற்சவம்
வருடத்திற் கொரு முறை
விசேசமாய் நடக்கும்

ஆழ நீருக்குள்ள
அப்பா முங்க முங்க
அதிசயங்கள் மேலே வரும்

கொட்டாங்குச்சி, கோலி
கரண்டி,
கட்டையோடு உள்விழுந்த
துரப்பிடித்த ராட்டினம்
வேலைக்காரி திருடியதாய்
சந்தேகப்பட்ட வெள்ளி டம்ளர்,
சேற்றிக்குள் கிளறி
எடுப்போம் நிறையவே



kalvi.lk

சேறுடா சேறுடாவென
அம்மா அதட்டுவாள்
என்றாலும்
சந்தோஷம் கலைக்க
யாருக்கு மனம் வரும்?

பகை வென்ற வீரனாய்
தலைநீர் சொட்டச் சொட்ட
அப்பா மேல் வருவார்

இன்று வரை அம்மா
கதவுகளின் பின்னிருந்துதான்
அப்பாவோடு பேசுகிறாள்
கடைசி வரை அப்பாவும்
மறந்தே போனார்
மனசுக்குள் தூரெடுக்க

1) இக்கதையினூடாக கவிஞர் கூற வரும் செய்தி யாது?

2) தூர் வாரும் நிகழ்ச்சியை உற்சவம் என்று கூறுவதில் பொதிந்துள்ள கருத்துக்களை எழுதுக.

3) இங்கு கையாளப்பட்டுள்ள உவமை அணியை இனங்கண்டு விளக்குக.

4) தூர் எடுத்தரின் போது வெளிவரும் பொருட்களாகக் குறிப்பிடப்படுபவை எவை?

5) “ இன்று வரை அம்மா
கதவுகளின் பின்னிருந்து தான்
அப்பாவோடு பேசுகிறாள்”
இத்தொடரில் நீர் காணும் நயத்தை எழுதுக.

(5 x 5 = 25 புள்ளிகள்)

**கீழ்க்காணும் உரைப்பகுதியை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

காளைக் கன்றுக்குட்டிக்கு கழுத்து சங்கலியோடு வாய்ப்பூட்டான கூடையும் கிடைத்தது நினைத்த நேரத்தில் பால் குடிக்க முடியவில்லை. பால் கறக்கும் நேரத்தில் மட்டும் கன்றுக்குட்டியை அவிழ்த்து விடும் மாடசாமி, சரியாகப் பால் சுரந்து அதன் வாய்க்கு வரும் நேரத்தில் அதை இழுத்துப் பிடித்துக் கட்டி விட்டுக் கறக்கத்தொடங்கி விடுவான். அவன் கறந்து முடித்துவிட்டு அவிழ்த்துவிடும் போதே மடியில் ஒரு சொட்டுப் பால் கூட மீதமிருக்காது.

கன்றுக் குட்டி முட்டிப்பார்க்கும்; மோதிப்பார்க்கும்; கதறிப்பார்க்கும். இந்த துடிப்பைக் காணும் அடுத்த வீட்டுக் காளையோ தன் அடித்தொண்டையிலிருந்து குரல் எழுப்பும்; குறுக்கே நிற்கும் சுவரில் தன் கொம்புகளை மோதுவதும் உண்டு.

தாய்ப் பசுவுக்கோ இந்த வேதனையைத் தாங்கவே முடிவதில்லை. அதனால் என்ன செய்ய முடியும்? கன்றுக்குட்டியின் கன்னங்கரிய பெருவிழிகள் இரண்டும் ஒளி இழந்து வந்தன. அதனால் துள்ளவும் துள்ளவும முடியவில்லை. குதிக்கவும் முடியவில்லை. தளதளவென்று சதைப்பிடிப்போடு இருக்க வேண்டிய மேனியில் எலும்புக் கூடு புறப்படத் தொடங்கியது.

1) கன்றுக்குட்டி பால் குடிக்க முடியாமல் போனத்திற்கான காரணம் யாது?

2) பால் குடிக்க முடியாமல் போன கன்றுக்குட்டியின் உணர்வுகளை எடுத்துக் காட்டுக.

3) கன்றுக் குட்டி பால் குடிக்காததால் அதன் தாயும் தந்தையும் அடையும் துயரத்தை விளக்குக.

4) ஜீவகாருண்யத்தின் தேவை எவ்வாறு காட்டப்படுகிறது?

5) “ காளையோ மூச்சு விடுவதற்குப் பதிலாக நெருப்புக்கனலை கக்கும். இதில் நீர் காணும் நயத்தை விளக்குக.

(5 x 5 = 25 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி – III

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.

1. விவேக சிந்தாமணியில் “ தேன் நுகர் வண்டு மது தனை..........” எனும் செய்யுளில்
   அ. கவிஞரின் கற்பனையாற்றல்
   ஆ. செய்யுளில் இடம் பெறும் அணிகள் என்பவற்றை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

2. வஞ்சியர் காண்டம் எனும் நாடகத்தில்
   அ. பெண்கல்வி பற்றிய சிந்தனைகள்
   ஆ. கண்ணகியின் சிறப்புக்கள் என்பவற்றை விளக்குக.

3. இயேசு கிறிஸ்து எனும் கவிதையில்
   அ. இயேசு கிறிஸ்துவின் மூன்றாம் நாள் உயிர்ப்பை பாரதி நோக்கும் முறை
   ஆ. மரியா மகதலேனா பற்றிய பாரதியின் சித்தரிப்பு

4. “ ஒரு ஆடு குதிதையின் மீது
   ஒரு குழந்தை ஆடுகிறது”  இதில்
   அ. குழந்தையின் செயல்கள் பற்றிய சித்தரிப்பு
   ஆ. இக் கவிதையின் எடுத்துரைப்பு முறையில் காணப்படும் நயத்தல் போன்றவற்றை எடுத்துக்காட்டுக.



kalvi.lk

kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page